# DEPOSITION OF WITNESS.
## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI
## Spl.SC.No. 56/2024 & Spl.SC.No.57/2024

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

PW1 - தனசேகரன்

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி (PW1) மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் கொடுத்த புகாரில் மணல் அள்ளப்பட்ட இடத்தில் சர்வே எண்ணோ நீள அகலங்களோ சேதம் மதிப்போ குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை நான் நேரில் சென்று பார்த்து அதன்பின் புகார் கொடுத்ததாக நான் என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் வழக்கில் கைப்பற்றிய வாகனத்தை சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு யார் கொண்டு வந்தது என்று நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக மேல் அதிகாரிகள் ஆலோசனையின்படி என்னால் புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.07 17:32:56 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 56/2024 & Spl.SC.No.57/2024

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | சேது | Caste: | |
| Father Name name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of March 2026.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் கடந்த 2023 ம் ஆண்டில் திருக்கோஷ்டியூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று எனது சொந்த ஊரான மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.09.2020 ம் தேதி மானாமதுரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்த போது எனது கட்டுப்பாட்டில் வரும் மானாமதுரை சிப்காட் காவல் நிலைய குற்ற எண். 216/2020 தொடர்புடைய வழக்கில் இதச பிரிவு 379 மற்றும் 21(1) MMDR Act படி வழக்கு பதிவு செய்து வைத்திருந்து புலன் விசாரணை நடைபெற்று வந்த வழக்கில் கடந்த 01.09.2020 ல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கில் தனிநபர் புகார் ஒன்றை தாக்கல் செய்தேன். மேற்படி தனிநபர் புகார் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் தனிநபர் புகார் தாக்கல் செய்வதற்கு முன் இவ்வழக்கின் சாட்சிகளை நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் ஏற்கனவே அசல் வழக்கில் சார்வு ஆய்வாளர் விசாரித்தால் நான் தனியாக யாரையும் விசாரிக்கவில்லை. இந்த வழக்கு தொடர்பாக கனிமவள அதிகாரிகளிடம் நான் தனியாக தகவல் சொன்னேனா என்றால் இல்லை.

**இவ்வழக்கின் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையில் வண்டியின் டிரெய்லர் முதல் தகவலில்** TN63L8883 **என்ற குறிப்பிட்டதை நான் தனி அறிக்கையில்** TN63L1883 **என குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். அது தட்டச்சு பிழையாகும். சார்பு ஆய்வாளர் சரிவர புலன் விசாரணை செய்யாமல் வைத்திருந்த வழக்கு விசாரணை கோப்பை மேலோட்டமாக பார்த்து தனிநபர் புகார் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை :** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.07 17:33:05 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை